www.newwisdomministries.com

# ஞானஒலி



# இயேசுவின் நாமத்தினாலே ஆகும்

ஞானம் 6 – ஒலி 16 – 16.04.2023



# இயேசுவே ஆண்டவர்





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் - ஞான ஒலி

# அல்லேலூயா....

உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் பிரியமான உடன்பிறவா சகோதர, சகோதரிகளே வணக்கம். உங்கள் அனைவரையும் இந்த ஞான ஒலி மின்னிதழின் வழியே சந்திப்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம்.

இயேசு மரித்து அடக்கம் செய்யப்பட்ட பிறகு, அவரது இறப்புக்குக் காரணமானவர்கள் நிம்திப் பெருமூச்சுவிட்ட அதே வேளையில், இயேசுவின் சீடர்கள் அனைவரும், தங்களின் சீடத்துவம் முடிந்துபோனது. என்ற கலக்கத்தில் இருந்தார்கள். ஆனால் அதற்கடுத்த மூன்று நாட்களுக்குப் பிறகு தலைகீழாக மாறிப்போனது.

இயேசுவின் உயிர்ப்பை ஊர்ஜிதம் செய்த தலைமைக் குருக்களும், பரிசேயரும், முன்னெப்போதையும்விட அதிக தந்திரத்தோடு வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இயேசுவின் உயிர்ப்பை கண்கூடாகப் பார்த்த காவலர்களுக்கு அதிகப்பணம் கொடுத்து, சீடர்கள் இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டுபோய் மறைத்துவிட்டு இயேசு உயிர்த்துவிட்டார் என்று தவறாகப் பிரச்சாரம் செய்கின்றார்கள் என்று சொல்லச் சொன்னார்கள்.

அந்தக் காவலர்களும் சதிகாரர்கள் சொல்லிக் கொடுத்தபடி வாந்தியெடுத்தார்கள். அந்த வதந்தி இன்றுவரை பரவிக் கொண்டே இருக்கின்றது.

இயேசு உயிர்க்கவில்லை என்று அன்று ஆரம்பித்த பொய்ப்பிரச்சாரம் இன்றும் உயிரோடு இருக்கின்றது. அது இந்தியாவிற்குள்ளும் பறைசாற்றப்படுகின்றது. 2023ம் ஆண்டுகளாக ஒரு பொய்யை உண்மையாக்க முயற்சி செய்யப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. யூத இனமான ஆரியம்

எப்போது இந்தியாவிற்கு வந்ததோ, அன்றிலிருந்து இன்றுவரை அந்த விஷமத்தனம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

அன்று பணத்திற்காக எதையும் செய்யவும், சொல்லவும், திண்ணவும் தயாராயிருந்த அந்தக் காவலர்களைப்போல, இன்றும் பேர், புகழ், பதவி, பட்டங்களுக்காக எதையும் செய்யும் அற்பர்களும், அல்பங்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்கள் இன்றும் இயேசு உயிர்க்கவில்லை என்று புலம்பித்திரிகின்றார்கள்.

இதில் என்ன கொடுமை என்றால், ஒருகாலத்தில் கிறிஸ்தவர்களாக இருந்தவர்கள். பணத்திற்காக, பிழைப்புக்காக, எலும்புத்துண்டுப் பதவிகளுக்காக, இயேசுவை மறுதலிப்பதோடு நவீன யூதாஸாக மாறியதுதான்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், இயேசுவின் உயிர்ப்பை பார்த்தவர்கள், அவர்கள் அளித்த சாட்சியங்கள் உயிரோடு திருவிவிலியத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. உலகிலேயே அதிகமான மொழிகளில் அச்சடிக்கப்பட்டு, அதிக எண்ணிக்கையில் வாங்கப்பட்டு, வாசிக்கப்படுகின்றது.

உலகிலேயே அதிக மக்கள் தொகையினர், இயேசு உயிர்த்தார் என்று நம்பிக்கொண்டு இருக்கின்றனர்.

ஆனால், யுடியூப்பில் இயேசு உயிர்க்கவில்லை என்று யாரோ சொன்னதை, உண்மையாக எடுத்துக் கொண்டு அதையே மக்க்ளுக்குச் சொல்பவனை, யாராவது அறிவுள்ளவன் என்று சொல்வார்களா? அவனை யாராவது ஞானி என்று சொல்வார்களா? அவன் நிச்சயமாக ஞானசூன்யனாகத்தான் இருப்பான்.

வலிப்பு வந்து ஆழ் மயக்கத்திற்குப்போய் ஆறு மணி நேரத்திற்குப் பிறகு சுயநினைவுக்கு வந்த ஒருவரை, தனக்குப் பிடித்தவர் என்பதற்காக, அவர் செத்து உயிர்த்தார் என்று ஒருவன் சொன்னான் என்றால், அவனை யாராவது, புத்தியுள்ளவன் என்று சொல்வார்களா?

சித்து விளையாடியவரையும், வலிப்பு நோயால் வந்த ஆழ்மயக்கத்திலிருந்து தப்பிப்பிழைத்தவரையும் இயேசுவோடு இணைத்துப் பேசுவது சிறுபிள்ளைத்தனமானது.

இயேசுவின் பிறப்பையும், போதனைகளையும், பாடுகள், மரணத்தையும், உயிர்ப்பையும் முழுமையாக அறியாதவர்களின் பிதற்றல்களைக் கேட்கும்போதும், பார்க்கும்போதும் ஒரு தமிழ் திரைப்படப்பாடல்தான் நினைவுக்கு வருகின்றது.....அந்தப்பாடல்...

ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை....ஆணையிட்டே யார் தடுத்தாலும் அலைகடல் ஓய்வதில்லை.... என்பதுதான்.

இயேசுவின் மரணத்தோடு அனைத்தும் முடிந்தது என்று நினைத்த சீடர்கள் தூய ஆவியாரின் பொழிவிற்குப்பிறகு...இயேசுவின் உயிர்ப்பின் வீரமிக்க சாட்சிகளாய் மறைபரப்புப் போராளிகளாய் மாறினர்.

அவர்களின் வார்த்தைகள், முடவர்களை நடக்க வைத்தது. படிப்பறிவில்லாத பேதுரு மற்றும் அனைத்து சீடர்களும் தங்களது

பேச்சினால் ஆயிரக்கணக்கான யூதர்களை இயேசுவின் நம்பிக்கையாளர்களாக மாற்றினார்கள்.

அன்று தொடங்கிய இயேசுவின் உயிர்ப்பு மறைபரப்புப் பணி இன்றுவரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது.

வேறு யாரைப்பற்றியும் இவ்வாறு போதிக்கப்படுவதில்லை.

இயேசுவுக்கு எதிராக எவ்வளவுக்கு வதந்திகள் பரப்பப்படுகின்றதோ, அவ்வளவுக்கு அதிகமாக பறைசாற்றப்படுகின்றது. கிறித்துவர்களின் எண்ணிக்கை தினமும் வளர்ந்து கொண்டேயிருக்கின்றது.

இந்த நம்பிக்கைத் தீயை கொழுந்துவிட்டு எறிய வைத்தவர் இயேசுவிற்குப்பிறகு, தலைமையேற்று சீடர்களை வழிநடத்திய பேதுருதான்.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றிய எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று இயேசுவிடம் கேட்ட பேதுரு, பதவி, பொன், பொருளாசைக்காக இயேசுவைப் பின்பற்றி வந்த பேதுரு, இனி இயேசுவை நம்பி எதுவும் கிடைக்கப் போவதில்லை என்ற விரக்தியில் அவரை மறுதலித்த பேதுரு, இயேசுவின் மரணத்திற்குப்பிறகு, மீண்டும் மீன் படித் தொழிலுக்கு திரும்ப சென்ற பேதுரு, இயேசுவின் உயிர்ப்பின் சாட்சியான பிறகு, உலகாசைகளைத் துறந்தார். இயேசுவின் உயிர்ப்பின் பணியாளரானார். இயேசுவின் நாமத்தின் வல்லமையால், அற்புதங்களைச் செய்தார். அனைவர் முன்னும் துணிவுடன் போதித்தார். இயேவின் உயிர்ப்பை மக்களிடையே உறுதியாக நிலைநிறுத்தினார்.

அன்று அவர் தொடங்கிய மனமாற்றப்பணி இன்றுவரை உலகமெங்கும் தொடர்கின்றது.

ஆனால் அதேவேளையில், இயேசுவின் உயிர்ப்பிற்கு எதிரான பிதற்றல்கள் வரலாற்று முழுவதும் ஒருப்பக்கம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது. அவர்கள் இயேசு உயிர்க்கவில்லை என்ற கத்திக் கூச்சல் போடுகின்றவேளையில்... இயேசுவின் உயிர்ப்பை மறைமுகமாக அவர்கள்அறியாமல் அறிவித்துக் கொண்டேதான் இருக்கின்றார்கள்.


ஒரு வரலாற்று நிகழ்வு. நிக்கோலா இவாலோவிச் உக்ரைன் ரஷ்யவைச் சேர்ந்த சிந்தனையாளர். அரசியல், பொருளாதாரம் பற்றி சிறப்பான புத்தகங்கள் எழுதியவர். கடவுள் மறுப்பாளர். பல இடங்களுக்குச் சென்று கடவுள் மறுப்புக் கொள்கையைத் தீவிரமாக போதித்து வந்தவர். 1930ம் ஆண்டு மாஸ்கோவிலிருந்து கெவிக் என்ற இடத்திற்குச் சென்று ஒரு மாபெரும் கூட்டத்தில் இயேசுவின் உயிர்ப்புக்கு எதிராகப் பேசி, கடவுள் மறுப்புப் பிரச்சாரத்தை செய்துவிட்டு, அங்கிருந்த மக்களிடம், தனது கருத்தை மறுத்து யாராவது பேசமுடியுமா? என்று கேட்டார். அப்போது ஒரு விவசாயி எழுந்து இயேசு உயிர்த்தார் அல்லேலூயா என்றார்...அவரைத் தொடர்ந்து அங்கிருந்த அத்தனைபேரும் இயேசு உயிர்த்தார் அல்லேலூயா என்று கத்த அரம்பித்திவிட்டார்கள். அங்கிருந்த அனைவருமே இயேசுவின் நம்பிக்கையாளர்கள் என்று அறிந்ததும் அவர் அமைதியாக சென்றுவிட்டாராம்.

இயேசு இன்றும் வாழ்கின்றார். அல்லேலூயா. அல்லேலூயா............





# விவிலியம் அறிவோம்



அருட்பணி.
ஆ.அலெக்ஸ்.cmf

விவிலியம்
விடுவிக்கும்

## விவிலியம் அறிவோம் – 86
## ஆசிர்கள் மற்றும் சாபங்கள்;

லேவியர் நூலில் காணப்படும் அனைத்து விதிகளுக்கும் கீழ்ப்படிந்து வாழவும் அதன் பயனாக மிகுந்த ஆசிர்களைப் பெற்று வாழவும் விடுக்கப்படும் அழைப்புடன் லேவியர் ல் முடிவடைகிறது. பண்டைய மேற்காசிய நாடுகளில் செய்யப்படுகின்ற உடன்படிக்கைகள் ஆவணங்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும். அந்த ஆவணங்களின் இறுதியில் ஆசிர்களும் சாபங்களும் பற்றிய பகுதி பதிவு செய்யப்பட்டிருக்கும். உதாரணமாக, கி.மு. எட்டாவது நூற்றாண்டில் எழுதப்பட்ட அமுராபி விதிகளிலும், கி.மு. பதிமூன்றாவது நூற்றாண்டில் எகிப்திய பார்வோன் இரண்டாம் இராம்சேசுவுக்கும் இத்திய மன்னனான மூன்றாம் கத்துசிலிசுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கை ஆவணத்திலும் ஆசிர்களும் சாபங்களும் பற்றிய பகுதிகள் இருப்பதைப் பார்க்கிறோம். பொதுவாக ஆசிர்களைவிட சாபங்கள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும். உடன்படிக்கையின் பங்குதாரர்கள் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக உடன்படிக்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்பதற்காகவே சாபங்கள் அதிகமாக கொடுக்கப்படுகின்றன. யஸவே கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் நடுவில் ஏற்படுத்தப்பட்ட சீனாய் மலை உடன்படிக்கையின் ஆவணமாக விடுதலைப் பயணம் நூலில் வருகின்ற உடன்படிக்கை நூல் (விப 19-24) உள்ளது. இந்த உடன்படிக்கை நூலின் இறுதியில் (விப 23:20-33) உடன்படிக்கை விதிகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதால் கிடைக்கின்ற ஆசிர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து உடன்படிக்கை விதிகளுக்கு கீழ்ப்படியாமல்

வாழ்வதால் வருகின்ற சாபங்கள் மறைமுகமாக கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆசிர்களும் சாபங்களும் மக்களைத் தூண்டித் திருச்சட்டங்களை நேர்முகமாக அனுசரிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ளன. பொற்கன்றுக்குட்டி நிகழ்விற்குப் பின் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையின் விதிகளாக லேவியர் நூலில் வருகின்ற விதிகள் உள்ளன. இந்நூலில் வருகின்ற ஆசிர்கள் மற்றும் சாபங்கள் பிரிவில் ஆசிர்களைவிட சாபங்கள் அதிகமாக உள்ளன. இந்த ஆசிர்களையும் சாபங்களையும் விரிவாகக் காண்போம்.

பொற்கன்றுக்குட்டி நிகழ்விற்குப் பின் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையின் விதிகளாக லேவியர் நூல் விதிகள், குறிப்பாக தூய்மை விதிகள், உள்ளன. உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தால் கடவுளின் ஆசிர் அவர்களுக்குக் கிடைக்கும். கீழ்ப்படிதல் என்பது கடவுளின் குரலுக்குச் செவிகொடுப்பதைக் குறிக்கிறது. இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி வழிநடத்துபவர் ஆண்டவர். எனவே ஆண்டவர் அவர்களிடமிருந்து கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். ஆண்டவரின் வழிநடத்துதலால் வளம் கொழிக்கும் கானான் நாட்டில் இஸ்ரயேல் மக்கள் குடியேறுவது உறுதியாகிவிட்டது. எனவே கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதற்கு அவர்களுக்குக் காரணங்கள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆசிர்களையும் சாபங்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட லேவி 26 வது பிரிவின் கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது. லேவி 26:1-13 வரையுள்ள பகுதியில் ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதால் வருகின்ற நன்மைகள் பதிவு செய்யப்படடுள்ளன. லேவி 26:14-39 வரையுள்ள பகுதியில் ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் வாழ்வதால் வருகின்ற தீமைகள் பட்டியலிடப்படுகின்றன. லேவி 26:40-46 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் மனமாற்றம் மற்றும் நாடு திரும்புதல் பற்றிப் பேசுகின்றன.

லேவி 26:1-13 வரையுள்ள பகுதி சிலை வழிபாடு பற்றிய ஓர் எச்சரிக்கையுடன் தொடங்குகிறது. இஸ்ரயேல் மக்கள் சிலைவழிபாட்டை முழுவதுமாக அழிக்க வேண்டும். விடுதலை பெற்றவர்களாக ஒரே கடவுளின் கீழ் அவர்கள் மகிழ்வுடன் வாழவேண்டும். மக்கள் ஓய்வுநாளை முறையாகக் கடைபிடிப்பதும் அவசியம். ஓய்வுநாள்களைக் கடைப்பிடித்து,என் தூயகத்திற்கு அஞ்சிவாழ்வீர்களாக (லேவி 26:1-2) என்பது ஒரு வேண்டுதலாக உள்ளது. ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதனால் மக்கள் தொடர்ச்சியான வேலைப் பளுவிலிருந்து விடுதலை பெற்றவர்களாகவும் வாழ வழி பிறக்கிறது. இஸ்ரயேல் மக்கள்

ஆண்டவரின்; மக்கள். உடன்படிக்கை விதிகளுக்கு உண்மை உள்ளவர்களாக, கீழ்ப்படிந்து வாழ்ந்தால் ஆண்டவர்; அவர்கள் நடுவில் வாழ்வதாக உறுதி கூறுகிறார் (லேவி 26:12). உடன்படிக்கை விதிகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது அவர்களுக்குப் பல நன்மைகளைக் கொண்டு வரும்; உரிய காலத்தில் மழை பொழியும், பயிர்கள் செழித்து மிகுந்த பலனைக் கொடுக்கும். பயிர்த்தொழில் சிறப்பாக நடைபெற்று தானியங்கள் கிடைக்கவில்லையென்றால் மக்கள் வாழ முடியாது. எனவே நிலத்தின் செழுமை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பருவ காலத்தில் நல்ல மழை பொழியவேண்டும்; தானியங்களும் திராட்சையும் நிறைவாகக் கிடைக்கவேண்டும் என்பது மக்களின் கவலையாக இருந்தது. இதனால்தான் பண்டைய மேற்காசிய நாடுகளின் கடவுளர்கள் பலரும் செழுமையின் கடவுளர்களாக, மழை மற்றும் புயலின் கடவுளர்களாக அறியப்பட்டார்கள். நிலம் செழிக்கும்; மக்கள் வளமுடன் வாழ்வார்கள் என்பது உடன்படிக்கை வாக்குறுதியின் ஒரு கூறாக இருந்தது.

கீழ்ப்படிதல்; செழுமையை மட்டுமல்ல பாதுகாப்பையும் கொடுக்கும். பகைவர்கள்மேல் அவர்களுக்கு எளிதில் வெற்றிகள் கிடைக்கும்; நாட்டில் அமைதி நிலவும். அமைதி என்பது வெறுமனே போர் இல்லாத நிலையோ அல்லது பகைவர்களின் அச்சுறுத்தல் எதுவும் இல்லாத நிலையையோ மட்டும் குறிக்கவில்லை. மாறாக கடவுளோடு கொண்டுள்ள உறவால் உள்ளத்தின் ஆழத்தில் எழுகின்ற அமைதியைக் குறிக்கிறது. இந்த அமைதி கடவுளின் கொடை, கடவுளின் அருளாசீர். இந்த அமைதி கடவுளின் திருவுளத்தை ஏற்றுக் கீழ்ப்படிவதால் உருவாவது. மேலும் கொடிய விலங்குகள் நாட்டில் அழிவை ஏற்படுத்தாது,மக்கள் அனைவரும் அமைதியுடன் படுத்துறங்க முடியும் (லேவி 26:6). இதனால் சமூகத்தில் ஒழுங்கும் ஒழுக்கமும் வளரும். இன்னும் ஆண்டவர் ஆபிரகாமுன் ஏற்படுத்திய உடன்படிக்கைக்கு ஏற்ப மக்கள் பலுகிப் பெருகச் செய்வார் (லேவி 26:9; மேலும் காண்க தொநூ 22:17). பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற இஸ்ரயேல் மக்கள் இனி ஆண்டவரின்; மக்களாக, அவரது ஊழியர்களாக வாழ்வர். பார்வோனின் கட்டுப்பாட்டில் வாழ்ந்தவர்கள் இனி ஆண்டவரின் கட்டுப்பாட்டில் வாழ்வர்.

லேவியர் நூலில் வருகின்ற ஆசிர்கள் மற்றும் சாபங்களில் சாபங்கள் அதிகமாக உள்ளன (லேவி 26:13-45) என ஏற்கனவே பார்த்தோம்.. உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கம் இல்லாத நிலையில் இந்தச் சாபங்கள் அவர்களைப் பாதிக்கும். உடன்படிக்கை விதிகளுக்குக் கீழ்ப்படியாமல் வாழும் மக்கள் மீது ஆண்டவர் நோய்களையும் பஞ்சத்தையும் கொண்டு வருவார்; பயிர்கள் பலன் கொடுக்காமல் போகும்; ஆடு மாடுகள்

அழிக்கப்படும் மற்றும் மக்களின் எண்ணிக்கையும் குறைந்து போகும் (லேவி 26:16, 19-22). மேலும் ஆண்டவர் மக்களை எதிரிகளிடம் கையளிப்பார், நகரங்கள் சூறையாடப்படும், கொள்ளை நோய்கள் அதிகமாகும். மனிதர்கள் சக மனிதர்களின் தசையையே தின்னும் அளவிற்கு பஞ்சம் ஏற்படும் (லேவி 26:25-29). இறுதியாக நகரங்களை பகைவர்கள் பிடிப்பார்கள்; மீதமிருக்கும் மக்கள் பல நாடுகளிலும் சிதறடிக்கப்பட்டு வாழ்வார்கள். நாடு அழிந்துபோகும். இஸ்ரயேல் ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் வாழ்ந்தால் ஏழு மடங்கு துன்பத்தை உங்கள் மீது வரச்செய்வேன் என மூன்றுமுறை ஆண்டவர் எச்சரிக்கிறார் (லேவி 26:18-21, 28). ஏழு என்ற எண் முழுமையைக் குறிக்கும் எண். எனவே ஏழு மடங்கு துன்பம் என இங்கே குறிப்பிடப்படுவது முழுமையான தீர்ப்பைக் குறிக்கிறது. இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அழிவுகள் இதற்குச் சான்றாக உள்ளன.

லேவி 26:34-35 இல் ஓய்வாண்டுகளைப் பற்றி வருகின்ற செய்திகளிலும் ஏழு என்ற எண் முதன்மையாக உள்ளது. நீங்கள் எதிரிகளின் நாட்டில் கொண்டு செல்லப்படும் போது, நாடு பாழாய்க் கிடக்கும். அப்போது அது தன் ஓய்வாண்டுகளை மகிழ்ச்சியாய் அனுபவிக்கும். அது ஓய்வடைந்து தன் ஓய்வை அனுபவித்து முடிக்கும் (லேவி 26:34) எனக் கூறப்படுகிறது. லேவி 25 வது பிரிவில் கூறப்பட்டுள்ளவாறு ஓய்வாண்டுகள் நடைமுறையில் செயல்படுத்தப்படாது என்பதைக் குறிக்கும் இறைவாக்கு இது. 2 குறிப்பேடு 36:21 இன் படி 70 ஆண்டுகளாக பாபிலோனில் அகதிகளாக வாழ்ந்த காலத்தில் நிலம் ஓய்வு எடுத்தது. இதன்படி பார்த்தால் கி,மு. 1400 முதல் கி.மு. 586 வரையுள்ள பாதிக்கு மேற்பட்ட ஓய்வாண்டுகள் பின்பற்றப்படவில்லை. லேவி26:25இல் இஸ்ரயேலின் பாவம் உடன்படிக்கை முறிவு எனக் குறிப்பிடப்படுகிறது. லேவியர் நூல் பலிகள் மற்றும் காணிக்கைகள் பற்றி பல பிரிவுகளில் பேசுகிறது. இந்தப் பலிகள் மற்றும் காணிக்கைகள் அனைத்தும் இஸ்ரயேல் நாட்டின் பாவங்களைப் போக்குவதற்கு போதாது (லேவி 26:31). மக்கள் தங்கள் பாவங்களுக்காகவும் கிளர்ச்சிகளுக்காவும் வருந்த வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்தால் கடவுள் உடன்படிக்கையை நினைவு கூர்வதாக உறுதியளிக்கின்றார். கடவுள் தங்கள் மூதாதையர்களுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இஸ்ரயேல் மக்களை மீண்டும் இஸ்ரயேலுக்கு அழைத்து வந்திருக்கின்றார் (லேவி 26:42, 44). நாட்டின் மிகவும் மோசமான நிலை பற்றிய முன்னறிவிப்பு இச 28-30 பிரிவுகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அந்தப் பிரிவுகளில் மோசே

மக்களிடம் விழித்திருக்கக் கூறுகின்றார். பாவத்தினால் தங்கள் எதிர்காலத்தை அழியாமல் காத்தருளக் கேட்கின்றார். வரலாற்றில் பல இறைவாக்கினர்களும் இந்தக் கருத்துக்களைப் பேசுகிறார்கள். ஆனால் அவர்களின் குரலுக்கு மக்கள் செவி கொடுக்கவில்லை.

இறுதியாக வரக்கூடிய பெரிய சாபமாக அமைந்திருப்பது நிலத்திலிருந்து விரட்டப்பட்டு அகதிகளாகச் செல்வதாகும் (லேவி 26:30). லேவி 26:40-45 வரையுள்ள பகுதி நம்பிக்கையையும் கொடுக்கிறது. நாடுகடத்தப்பட்டு அகதிகளாக வாழ்ந்தாலும் கடவுளின் இரக்கம் அவர்களுடன் இருக்கும் எனக் கூறப்படுகிறது. கடவுளுடன் சரியான உறவு ஏற்படுவதற்கு மக்கள் மனம் வருந்த வேண்டும்; மனங்களில் மாற்றம் ஏற்படவேண்டும். அப்போது ஆண்டவர் அவர்களின் மூதாதையர்களுடன் செய்த உடன்படிக்கையை நினைவு கூர்வார். நினைவு கூர்தல் என்ற கருத்து இப்பகுதியில் இரண்டு முறை கூறப்படுகின்றது. பழைய ஏற்பாட்டில்

நினைவு கூர்தல் என்ற கருத்திற்கென ஒரு மரபு உள்ளது. வெள்ளப் பெருக்கின்போது கடவுள் நோவாவை நினைவுகூர்கிறார் (தொநூ 8:1) எனவே அவரைக் காப்பாற்றி அவர் வழியாக மனித குலம் மீண்டும் தழைப்பதற்குக் காரணமாகின்றார். பழைய ஏற்பாட்டில் குழந்தை பெற இயலாத பல பெண்களை ஆண்டவர் நினைவு கூர்கின்றார் (தொநூ 30:22-24 ராகேல்; 1 சாமு 1:9-19 அன்னா); அவர்களின் வேண்டுதல்களைக் கேட்கின்றார். கடந்த காலத்தில் ஆண்டவர் கொடுத்த வாக்குறுதிகளை நினைவு கூர்வது உடன்படிக்கைக்குத் தேவையான ஒன்றாக இருக்கிறது: நீர் எங்களோடு செய்த உடன்படிக்கையை நினைவுகூரும்; அதனை முறித்துவிடாதீர் (எரேமி 14:21) என எரேமியா வேண்டுதல் புரிகின்றார். மேலும் இணைச்சட்ட இறையியல்படி கடவுளின் வல்ல செயல்களை மக்கள் நினைவு கூரவேண்டும் (இச 5:15; 7:18; 8:1-5). அவ்வாறு நினைவு கூர்வதால் அவர்கள் மனம் திருந்தி கடவுளிடம் திரும்பி வரவேண்டும். மனம் திருந்துதலும் திரும்பி வருதலும் நிலத்திற்கும் முக்கியமானது; ஏனெனில் நிலம் பாவ மாசுகள் அகற்றித் தூய்மைப்படுத்தப் படவேண்டும் (லேவி 26:43). நிலத்தைப் பற்றிப் பேசுவது நாடு கடத்தப்படுவது பற்றிய இறையியலை நினைவுபடுத்துகிறது. மக்கள் பாபிலோனுக்கு நாடுகடத்தப்படுவது வாக்களிப்பட்ட நாட்டிற்கு ஓய்வைக் கொடுக்கிறது. நிலம் மீண்டும் தன்னை வளப்படுத்திக் கொள்வதற்கு உதவுகிறது. எஞ்சியிருக்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டம் நிலத்தில் குடியேறும்; கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றி வாழும். சீனாய் உடன்படிக்கையை நினைவுகூர்வது இதற்கு அடிப்படையாக உள்ளது.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ் cmf

# ஞாயிறு மறையுரை



அருட்தந்தை.ஆரோக்கிய யூதா ததேயூஸ்
திரு இருதய ஆண்டவர் ஆலயம், ஈரோடு ரயில்வே காலனி
கோவை மறைமாவட்டம்

**பாஸ்கா 2ம் ஞாயிறு – 16.04.2023**

**திருத்தூதர் பணிகள் 2/42-47 – 1 பேதுரு 1/3-9 – யோவான் 20/19-31**

அன்பார்ந்த இறைமக்களே!

உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களும், வணங்கங்களும். இன்று தாய்த் திருச்சபை இரக்கத்தின் ஞாயிறாக, பாஸ்கு காலத்தின் 2-ம் ஞாயிறைக் கொண்டாட அழைப்பு விடுக்கின்றது.

எனது பள்ளி ஆசிரியர்களில் ஒருவர் பாடம் நடத்துகின்ற நேரம், மாணவர்களுக்கு நன்கு புரியும்படி நடத்துவார். ஒருவேளை மாணவர்களுக்கு புரியவில்லை என்றால், அவர்கள் புரிந்து கொள்கின்ற வரையிலும், மீண்டும் மீண்டும் மாணவர்கள் தங்களின் சந்தேகங்களைக் கேட்டு அறிந்து கொள்ளலாம். 100 முறை கேட்டாலும் சொல்லித் தர அவர் தயங்க மாட்டார். ஆனால், புரியும்படி நடத்திவிட்டு, கேள்விகள் கேட்கிறபொழுது மாணவர்கள் அவரின் கேள்விகளுக்கு விடை சொல்லவில்லை என்றால், கோபத்தின் உச்சிக்கே சென்று விடுவார். பிரம்பால் நன்கு வெளுத்து விடுவார். இதற்காகவே, ஆசிரியரின் மனநிலை அறிந்த சில மாணவர்கள் புரியவில்லை, புரியவில்லை என்று பாட நேரம் முடியும்வரை சந்தேகங்கள் கேட்பதும் உண்டு.

இன்றைய நற்செய்தியில், ஆண்டவர் இயேசு தனது சீடர்களுக்கு இரண்டு முறை காட்சி தருகின்றார். முதல் காட்சியிலே தோமா இல்லாத நிலையிலே, தனது சந்தேகத்தினை மற்ற சீடர்களிடத்திலே வெளிப்படுத்துகிறார். அவர் ஆண்டவரின் விலாவிலே விரல்களை இட்டு பார்த்தாலொழிய நம்ப மாட்டேன் எனவும் உறுதிபட தெரிவிக்கின்றார். எனவே, ஆண்டவர் இயேசு தோமாவுக்கு சிறப்பு உயிர்ப்பு காட்சியினை இரண்டாம் முறையாகத் தருகின்றார். தோமாவிடத்திலே அவரது ஐயப்பாட்டினை நிவர்த்தி செய்யவும் அழைக்கின்றார். ஆண்டவர் இயேசுவும் ஒரு குருவாக, தனது சீடர் தோமாவின் சந்தேகத்தினை நிவர்த்தி செய்து, அவருக்கு ‘சந்தேகத் தோமையார்’ என பெயர் கிடைக்கவும் வழி செய்கிறார்.

இயேசுவின் உயிர்ப்பு அனுபவம் எதை இன்றைய வழிபாட்டிலே நமக்குத்

தருகின்றது? ஏன் திருச்சபை இன்றைய வழிபாட்டினை இரக்கத்தின் வழிபாடாக கொண்டாட அழைக்கின்றது? கடவுள் மாபெரும் இரக்கம் கொண்டவர். அவரது இரக்கத்திற்கு அளவே இல்லை. 'அவரது இரக்கம் தீர்ந்து போகவில்லை' என்று புலம்பல் புத்தகம் 3:22 கூறுகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் கூட, 'நாம்தான் கடவுளின் இரக்கத்தை தேட சோர்ந்து போகிறோமே தவிர, கடவுள் தனது இரக்கத்தை நம்மீது பொழிய சோர்ந்து போவதில்லை என்று சொல்கிறார்.

எனவே, அவரின் இரக்கத்தினை நாட இன்றைய வழிபாடு நமக்கு அழைப்புத் தருகின்றது. ஏனெனில், நமது மனித வாழ்விற்கு கடவுளின் இரக்கம் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. எப்படி உயிர்வாழ, மூச்சுக் காற்று அவசியமோ, அதுபோல, நமது ஆன்மிக வாழ்வில் உயிர்ப்பு அனுபவம் பெற, கடவுளின் இரக்கத்தை அவசியம், அடிக்கடி நாட வேண்டும். எனவேதான், கடவுளும் இதை உணர்ந்து, குறைபாடுகள் கொண்ட தனது சீடர்களுக்கு திரும்பத் திரும்ப உயிர்ப்பு காட்சியைத் தருகிறார். இரக்கத்தோடு அவர்களின் குறைகளைக் கழுவுகிறார், அவர்களின் உள்ளத்தினைத் தேற்றுகிறார்.

தோமா இயேசுவின் உயிர்ப்பிலே, சந்தேகம் கொண்டார், ஆனால் உயிர்த்த இயேசு அவரின் நம்பிக்கை குறைவை இரக்கத்தோடு நிறைவு செய்தார். எனவே, தோமா உயிர்ப்பு அனுபவம் பெற்றபின், இந்தியா வந்தார், நற்செய்தி அறிவித்தார், ஆண்டவருக்காக உயிர் தந்தார்.

நம்மிடமும் குறைகள் பல உண்டு. ஆனால், சாவை வென்ற இயேசு, தனது ஒப்பற்ற இரக்கத்தால் நம்மிடம் உள்ள குறைகளை நிறைவாக்க, அவரின் இரக்கத்தினை வேண்டிட அழைக்கின்றார். நமது குறைவான நம்பிக்கை நிறைவாக, உடல் நலம் குணமடைய, தேவைகள் சந்திக்கப்பட, முயற்சிகள் வெற்றியடைய, உழைப்பு ஆசீர்வதிக்கப்பட, சாட்சியமற்ற நமது வாழ்வு உறுதிபெறவும், சான்று பகரவும், தொடர்ந்து இன்றைய வழிபாட்டிலே கலந்து கொள்வோம். ஏனெனில், நமது ஆண்டவர் இரக்கம் உள்ளவர். ஆமென்.





# பாஸ்கா காலம் இரண்டாம் ஞாயிறு

தி.ப. 2:42-47, 1 பேது. 1:3-9, யோவா. 20:19-31

**16-04-2023**

## திருப்பலி முன்னுரை



பா. சேவியர்
திண்டுக்கல்

ஆண்டவருடைய வார்த்தையிலும், நட்புறவிலும் நம்பிக்கை கொண்டு வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கின்றேன்.

உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று தம் சீடரை வாழ்த்திப் பலப்படுத்திய இயேசுவின் அதே அற்புதமான ஆசீர்வாதத்தைப் பெற, வாழ்வு தரும் இறை சந்நதி முன் மகிழ்வுடன் கூடியுள்ளோம்.

இயேசுவின் பிறப்பு அடிமை வாழ்வின் முடிவாகவும், அவரது மரணம் நிலை வாழ்வின் தொடக்கமாகவும், அவரது உயிர்ப்பு, நம்பிக்கை - அமைதி - மகிழ்ச்சி இம்மூன்றின் சங்கமமாகவும் இருக்கிறது.

நமது நம்பிக்கை உயிரோட்டமான நம்பிக்கையா? என்ற கேள்வியை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய திருப்பலி.

இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளவும், அந்த நம்பிக்கையை வாழ்வாக்கி நம்மிடமுள்ள செல்வம், அன்பு, ஆற்றல்கள் என்னும் கொடைகளை பிறருடன் பகிர்ந்து வாழவும் அறிவுறுத்துகிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

ஆதாமில் ஊதி உயிர் அளித்த இறைவன், உலர்ந்த எலும்புகளுக்கு உயிர் அளித்து புதுவாழ்வு அளித்த இறைவன் இன்றும் இதோ இத்திருப்பலி வழியாக நமக்கு தூய ஆவியாரை வழங்கி புதுவாழ்வு வழங்குகின்றார்.

நம்பிக்கை ஒன்றே உயர்வுக்கு வழி, நம்பிக்கை உள்ளவனின் காலங்கள் செல்வமாகின்றன. நம்பிக்கை இழப்பவனின் செல்வங்கள் காலமாகின்றன. இறைவனிடம் நம்பிக்கைகொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாம் அந்த நம்பிக்கைக்கு செயல்வடிவம் கொடுக்க இறையருளை வேண்டி நம்பிக்கையுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

அன்றைய தொடக்ககால கிறிஸ்து வர்கள் திருத்தூதர்களின் படிப்பினை யைக் கேட்டு அதன்படி வாழ்ந்ததால் தான் தங்கள் வாழ்க்கையில், எத்தகைய துன்ப துயரங்கள் வந்தா லும் நம்பிக் கையில் பிரமாணிக்கமாய் இருந்தார் கள் என்பதை எடுத்துரைக் கிறது இன்றைய முதல் வாசகம். கிறிஸ்து வில் நம்பிக்கைகொண்டோர் அனை வரும் இருப்பதையெல்லாம் பொது வாக்கி பகிர்ந்து மகிழ்ந்து வாழ்ந் ததை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

சடங்கின் மகத்துவம், அதனால் ஏற்படும் உரிமைகள், கடமைகள் ஆகியவை பற்றிய தூய பேதுருவின் அருளுரையே இன்றைய இரண்டாம் வாசகம். நெருப்பில் புடமிடப்படும் பொன்னே தூய்மை பெறுகிறது. துன்பங்களால் புடமிடப்படும் நம்பிக்கையே மீட்பைத் தருகிறது என்பதை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) நம்பிக்கையின் நாயகனே இறைவா, தொடக்ககால திருச்சபை யின் திருத்தூதர்கள், இயேசுவை கற்பித்து மக்களை விசுவாசத்தில் வழிநடத்தியது போன்று இன்றைய திருச்சபையின் தலைவர்கள் மக்களை விசுவாசத்திலும், ஒருமைப்பாட்டிலும் வழிநடத்தி, பகிர்வு மனப்பான்மையை ஊக்கு வித்து வளர்த்திட அவர்களுக்கு போதிய ஆற்றலையும், உடல் நலத் தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நம்பிக்கையின் ஊற்றே இறைவா, எம்மை உமது அமைதியின் கருவியாக்கும். உம் திருமகன் இயேசுவின் சமாதானம் எங்கள் இதயங்களில் ஆட்சி புரிந்திட அருள் தாரும். அவரது உயிர்ப்பால் புதுப்பிறப்படைந் திருக்கும் நாங்கள், எங்கள் வாழ்வில் சந்திக்கும் பல்வேறு சோதனைகளையும், துன்பங் களையும் மனம் தளராது, எதிர் கொண்டு வென்று, புடம் போடப்பட்ட பொன்போல் தூய்மையான வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) நம்பிக்கையின் நாதமே இறைவா, உயிர்த்தெழுதலை இவ்வுலகிற்கு உணர்த்தி, நீரே என் ஆண்டவர், நீரே என் தேவன் என்ற நம்பிக்கை அறிக்கையை இந்த அவனிக்குத் தந்து, நம்பிக்கையின் விதையான புனித தோமாவைப் போல் உம்மில் நாங்கள் விசுவாசத் துடன் வாழவும், உம்மில் சரண டைந்து உம் திருவுளத்தை நிறைவேற்றி வாழ்ந்திடவும் அருள் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) உலர்ந்த எலும்புகளுக்கு உயிர் அளித்து புதுவாழ்வுதந்த தந்தையே இறைவா, இவ்வுலகத்தின் எல்லா பகுதிகளிலும் விரைவாகப் பரவி மக்களை தாக்கி நிலைகுலையச் செய்து வருகின்ற தொற்று நோய் முற்றாக அழிய அருள் தாரும். எம்மை வாட்டும் நோய் நொடிகளில் இருந்து, எங்கள் ஒவ்வொருவரை யும் காப்பாற்றி நலம் தர வேண்டு மென்று கருணையின் தெய்வமான இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



திருமதி.மார்க்ரேட் பாண்டியன்
கவுண்டம்பாளையம்,கோவை

# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

பலவீனமானவர்களே பழிவாங்குவார்கள்
மனவுறுதியுடையோரே மன்னிப்பர்
பக்குவமுடையோர் கடந்து முன்னேறுவர்
– ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

ஞானகள் எப்போதும் தனியே இருப்பர்
பலவீனமானவர்கள் கூட்டமாய் இருப்பர்


இலட்சியத்தோடு இயங்குபவர்களுக்குக்
கவலைப்பட நேரமிருக்காது

நம்மை வேண்டாம் என்று தவிர்ப்பவர்களுக்கு
மீண்டும் எந்தத் தொந்தரவும் கொடுக்காது
அவர்களைத் தனியே விட்டுவிடவேண்டும்

பணம் ஞானிகளுக்கு அடிமை
பேராசைக்காரர்களுக்கு எஜமானன்
–செனேகா

வலி தீயவரைக் குரூரமாக்கும்
நல்லவரைப் பக்குவப்படுத்தும்

நாம் கவனம் செலுத்துவது எதோ
அது நம்மைத் தன்வயப்படுத்தும்
தீயது தீயதாய், நல்லது நல்லதாய்



# திருப்பலி வாசகங்கள்

## பாஸ்கா இரண்டாம் வாரம்

## 16.04.2023 முதல் 23.04.2023

**16.04.2023 – பாஸ்கா 2ம் வாரம் – ஞாயிறு**

திருத்தூதர் பணிகள் 2/42-47

1 பேதுரு 1/3-9

யோவான் 20/19-31

**17.04.2023 – திங்கள்**

திருத்தூதர் பணிகள் 4/23-31

யோவான் 3/1-8

**18.04.2023 – செவ்வாய்**

திருத்தூதர் பணிகள் 4/32-37

யோவான் 3/7-15

**19.04.2023 – புதன்**

திருத்தூதர் 5/17-26

யோவான் 3/16-21

**20.04.2023 – வியாழன்**

திருத்தூதர் பணிகள் 5/27-33

யோவான் 3/31-36

**21.04.2023 – வெள்ளி**

திருத்தூதர் பணிகள் 5/34-42

யோவான் 6/1-15

**22.04.2023 – சனி**

திருத்தூதர் பணிகள் 6/1-7

யோவான் 6/16-21

**23.04.2023 – பாஸ்கா 3ம் வாரம் – ஞாயிறு**

திருத்தூதர் பணிகள் 2/14, 22-33

1 பேதுரு 1/17-21

லூக்கா 24/13-35



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 41

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை

## குறள் விளக்கம்

இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகிறவன் அறத்தின் இயல்பை உடைய மூவருக்கும் நல்வழியில் நிலைபெற்ற துணை ஆவான்.

## சிந்தனை

அந்த மனிதனுக்கு ஞானமடைய வேண்டுமென்று ஆசை, தன் கடமைகளை, குடும்பத்தை, தொடர்புகளை உதறிவிட்டு, ஓரளவு உணவு மட்டும் எடுத்துக் கொண்டு ஓர் அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொண்டான். தியானத்தில்; மூழ்கினான். அவன் மனக்கண்ணில் ஒரு துறவி தோன்றினார். என்னைத் தேடி வா என்றார். கதவைத் திறந்து வந்தவனுக்கு குழந்தையின் முகம், மனைவியின் முகம், அவன் எதிரியின் முகம் எல்லாமே அந்த துறவியின் முகமாகத் தெரிந்தது, குழம்பினான்.

அன்றிரவு அவன் கனவில் துறவி மீண்டும் வந்தார். நான் தான் ஞானம் நான் கடமைகளுக்கும் உறவுகளுக்கும் நடுவில் ஒளிந்திருக்கிறேன். ஞானம் என்பது, அன்றாட வாழ்விலிருந்து அன்னியமானதல்ல. சக உயிர்களை நெருங்கி வருவது என்றார். உயிர்களையும் உலகையும் நேசிப்பதே ஞானம் என்பதை அவன் உணர்ந்தான்.

இல்லறத்தை பேண வேண்டியவன் மனிதன். அவன் குடும்ப உறுப்பினர்களாகிய பெற்றோர், மனைவி, மக்கள், உறவினரை பேணுவதை தனது கடமையாகக் கொண்டுள்ளான். ஆனால் பொதுவாழ்வில் ஈடுபடுவோர் பலர் குடும்ப உறுப்பினர்களை பேணாமல் பொறுப்பற்று வாழ்கின்றனர். குடும்ப பொறுப்புகளை நிறைவாகச் செய்வதே இல்லறத்திற்குரிய அறமாகும்.

இதனையே திருவிவிலியமும் தமது சொந்தக் குடும்பத்தை நடத்த தெரியாத ஒருவரால் கடவுளின் சபையை எவ்வாறு கவனிக்க முடியும்? 1 திமொ 3:5 என்கிறது. மேலும், திருத்தொண்டர்கள் ஒரு மனைவி கொண்டவர்களாயும், பிள்ளைகளையும் சொந்த குடும்பத்தையும் நல்ல முறையில் நடத்துகிறவர்களாயும் இருக்க வேண்டும் 1திமொ 3:12 என்கிறது. துறவறத்தார் இல்லறத்திலிருந்து வந்தவர்கள். இல்லத்து அறத்தை ஓம்புபவர்களால் மட்டுமே துறவறத்தையும் அல்லது பொதுவாழ்வு அறத்தையும் பேண முடியும். ஞானமடைய விரும்பியவனுக்கும் துறவி இந்த பாடத்தையே நன்கு போதிக்கிறார்.

இன்றைய காலகட்டத்தில் இல்லறம் பேணப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. குடும்பம் சிறுத்துவிட்டதும், இதயங்கள் சிறுத்துவிட்டதும் இதற்கு முக்கிய காரணம். விவாகரத்து, ஒற்றை பெற்றோர், ஒழுக்கமின்மை, சுயநலம் என பல பிரச்சனைகள் இல்லறத்திற்கு சவாலாக நின்று குடும்பத்தை துண்டாடுகின்றன. இல்லறம் பேணுவோம்.





அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

# நலம் தரும் இயற்கை வளம்





திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்

நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலக் கல்வி
பித்தப்பைக் கல் கரைக்கும், மாதவிடாய்க் கோளாறு நீக்கும்... கருஞ்சீரகம்!
கருஞ்சீரகம்...
இந்த மூலிகைத் தாவரம், தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது.
கருஞ்சீரகம்...
சமஸ்கிருதத்தில்
கிருஷ்ண ஜீரகா’,
குஞ்சிகா’,
உபகுஞ்சிகா
உபகுஞ்சீரகா
என்றும்
ஆங்கிலத்தில்
`Black cumin',
`Small Fennel' என்றும்
இந்தியில்
காலாஜீரா’,
கலோன்ஜி’
என்றும் சொல்வார்கள்.

இறப்பைத் தவிர மற்ற எல்லா நோய்களையும் குணப்படுத்தக்கூடியது என்று இதைக் குறிப்பிட்டிருக்கிறார் நபிகள் நாயகம்.

யுனானி மருத்துவத்தில் கருஞ்சீரக எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது.
அரபு நாடுகளில் இதை உணவில் சேர்த்துப் பயன்படுத்துகிறார்கள்.
பைபிளிலும் கருஞ்சீரகத்தைப் பற்றியக் குறிப்பு இருக்கிறது.
மருத்துவக் குணங்கள் நிறைந்த கருஞ்சீரகத்தின் விதையில் உள்ள
தைமோகுயினன் (Thymoquinone)
என்ற வேதிப்பொருள் வேறு எந்தத் தாவரத்திலும் இல்லை.
இது நோய் எதிர்ப்பு சக்தியை தரக்கூடியது.
இதில் உடலுக்கு நன்மை செய்யும் கொழுப்பு இருப்பதால்,
கெட்ட கொழுப்புக் குறைய உதவும். மேலும்,
அமினோ அமிலங்கள் வைட்டமின்கள்,
கால்சியம் இரும்புச்சத்து போன்றவையும் இதில் உள்ளன.
சக்திவாய்ந்த ஆன்டிஆக்ஸிடென்ட் ஆகச் செயல்படும் கருஞ்சீரகம்
வீக்கம் தணிக்க உதவும்.
ஆஸ்துமா, சுவாசப் பிரச்னைகள் நெருங்காமல்
உடலுக்கு எதிர்ப்பு சக்தியைத் தரும்.
இதயநோய், புற்றுநோய் போன்றவற்றைக்
குணப்படுத்தும் அளவுக்கு சக்தி வாய்ந்ததாக கருஞ்சீரகம் கருதப்படுகிறது.
இது எலும்பு மஜ்ஜை உற்பத்தியைச் சீராக்கி
புற்றுநோய்க் கட்டிகள் ஏற்படாதபடி பாதுகாக்கும்.
குறிப்பாக, கணையப் புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது.
மிகச் சாதாரணமாகப் பலரையும் பாடாகப்படுத்தி வரும் மூக்கடைப்புக்கு
இது நல்ல மருந்து.
ஒரு டீஸ்பூன் கருஞ்சீரகப் பொடியை 50 மி.லி தேங்காய் எண்ணெய் சேர்த்து
சூடாக்கி, அதில் இரண்டு சொட்டு மூக்கில்விட்டால் மூக்கடைப்பு விலகும்.
ஒரு டீஸ்பூன் கருஞ்சீரகப் பொடியை வெந்நீர், தேன் கலந்து பருகினால்
சிறுநீரகக் கற்களும் பித்தப்பைக் கற்களும் கரையும்.
இதை காலை, மாலை இரண்டுவேளையும் சாப்பிட்டு வரவேண்டியது அவசியம்.
தொடர் இருமலால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு டீஸ்பூன் கருஞ்சீரகப் பொடியை,
அரை டீஸ்பூன் அரைத்த பூண்டு விழுதுடன்
தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.
இது நுரையீரலில் தேங்கியிருக்கும் சளியை அகற்றும்.
தோல் நோய்களுக்கும் கருஞ்சீரகம் நல்ல மருந்து.
கரப்பான், சொரியாசிஸ் உள்ளவர்கள்
கருஞ்சீரகத்தைப் பொடியாக்கி தேய்த்துக் குளிக்கலாம்.
இதனால் நோயின் தீவிரம் குறையும்;
அதனால் ஏற்பட்ட புண்களும் தழும்புகம் மறையும்.
குளியல் பொடிகளில் இதைச் சேர்த்துப் பயன்படுத்தலாம்.
மாதவிடாய்க் கோளாறுகளின்போது
அடிவயிறு கனமாகி, சிறுநீர் கழிக்கச் சிரமப்படும் பெண்களுக்கு
இது நல்ல மருந்து.

வறுத்துப் பொடித்த கருஞ்சீரகத்துடன்
தேன் அல்லது கருப்பட்டி கலந்து,
மாதவிடாய் தேதிக்கு 10 நாள்கள் முன்பிருந்தே
ஒரு டேபிள்ஸ்பூன் சாப்பிடலாம்.
இது வயிற்று வலி, ரத்தப்போக்கு உள்ளிட்ட மாதவிடாய்ச் சிக்கல்களை சரி செய்யும்;
வயிறு கனம் குறைந்து நன்றாகச் சிறுநீர் வெளியேற உதவும்.
பிரசவத்துக்குப் பின்னர் கர்ப்பப்பையில் சேரும் அழுக்கை நீக்க,
ஒரு டேபிள்ஸ்பூன் கருஞ்சீரகப் பொடியுடன் பனைவெல்லம் சேர்த்துச் சாப்பிடலாம்.
குழந்தை பெற்ற மூன்றாவது நாளில் இருந்து
காலை, மாலை என ஐந்து நாள்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.
இதேபோல் வெந்தயம் கால் கிலோ,
ஓமம் 100 கிராம், கருஞ்சீரகம் 50 கிராம் எடுத்து
கருக விடாமல் வறுத்துப் பொடியாக்க வேண்டும்.
இதை ஒரு டீஸ்பூன் அளவுக்கு எடுத்து,
இரவு நேரத்தில் வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிக்க வேண்டும்.
இதைச் சாப்பிட்டதும் வேறு எந்த உணவும் சாப்பிடக் கூடாது.
இப்படித் தொடர்ந்து செய்து வந்தால்,
உடலில் தேங்கியிருக்கும் அனைத்து நச்சுக்களும்
மலம், சிறுநீர், வியர்வை மூலம் வெளியேறும்; தேவையற்ற கொழுப்பு நீங்கும்;
ரத்தம் சுத்திகரிக்கப்பட்டு ரத்த ஓட்டம் சீராகும்.
பல மருத்துவக் குணங்கள் நிறைந்த கருஞ்சீரகத்தை
அவ்வப்போது உணவில் சேர்த்துக்கொள்வது உடல்நலத்துக்கு உத்தரவாதம் தரும்.
நன்றி எம் உறவுகளே..!
என்றும் உங்கள் அன்பு சகோதரன்.
ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன்
9360456063

